## நவம்பர் – 20 – திங்கள்

**தீயோரின் கட்டுகள் என்னை இறுக்குகின்றன: ஆயினும், உம் திருச்சட்டத்தை நான் மறவேன். திபா. 119:61**

**முதல் வாசகம் :1மக்கபேயர்1:10–15,41–43.54–57,62-63**

அவர்கள் நடுவிலிருந்து பொல்லாத வழிமரபினன் ஒருவன் தோன்றினான் அவன் மன்னர் அந்தியோக்கின் மகன் அந்தியோக்கு எப்பிபான் ஆவான் முன்பு உரோமையில் பிணைக் கைதியாக இருந்த அவன் கிரேக்கப் பேரரசின் நூற்று முப்பத்தேழாம் ஆண்டு ஆட்சி செய்யத் தொடங்கினான். அக்காலத்தில் இஸ்ரயேலில் தீநெறியாளர் சிலர் தோன்றி, "வாருங்கள், நம்மைச் சுற்றிலும் இருக்கும் வேற்றினத்தாரோடு நாம் உடன்படிக்கை செய்துகொள்வோம் ஏனெனில் நாம் அவர்களை விட்டுப் பிரிந்ததிலிருந்து நமக்குப் பல வகைக் கேடுகள் நேர்ந்துள்ளன" என்று கூறி, மக்கள் அனைவரையும் தவறான வழியில் செல்லத் தூண்டினார். இது அவர்களுக்கு ஏற்படையதாய் இருந்தது. உடனே மக்களுள் சிலர் ஆர்வத்தோடு மன்னனிடம் சென்றனர். அவர்கள் கேட்டதற்கு இணங்க, வேற்றினத்தாரின் விதி முறைகளைக் கடைப்பிடிப்பதற்கு அவன் அவர்களுக்கு உரிமை அளித்தான். வேற்றினத்தாருடைய பழக்கவழக்கத்திற்கு ஏற்ப அவர்கள் எருசலேமில் உடற்பயிற்சிக்கூடம் ஒன்று ஏற்படுத்தி னார்கள் விருத்தசேதனத்தின் அடையாளத்தை மறைத்து, தூய உடன்படிக்கையை விட்டுவிட்டு, வேற்றினத்தாரோடு கலந்து, எல்லாவகைத் தீமைகளையும் செய்தார்கள். எல்லாரும் ஒரே மக்களினமாய் இருக்கவேண்டும் என்றும், தனிப்பட்ட பழக்க வழக்கங்களைக் கைவிடவேண்டும் என்றும் அந்தியோக்கு மன்னன் தன் பேரரசு முழுவதிலும் ஆணை பிறப்பித்தேன். மன்னனின் கட்டளைப்படி நடக்கப் பிற இனத்தார் அனைவரும் இசைந்தனர். இஸ்ரயேலருள் பலர் மன்னனுடைய வழிபாட்டுமுறைகளை மனமுவந்து ஏற்றுக்கொண்டனர் சிலைகளுக்குப் பலியிட்டனர் ஓய்வுநாளைத் தீட்டுப்படுத்தினர். நூற்று நாற்பத்தைந்தாம் ஆண்டு கிஸ்லேவு மாதம் பதினைந்தாம் நாள் அந்தியோக்கும் அவனுடைய ஆள்களும் பலிபீடத்தின் மேல் நடுங்க வைக்கும் தீட்டை நிறுவினார்கள் யூதேயாவின் நகரங்களெங்கும் சிலை வழிபாட்டுக்கான பீடங்களைக் கட்டினார்கள். வீட்டுக் கதவுகளுக்கு முன்பும் வீதிகளிலும் தூபம் காட்டினார்கள். தங்கள் கண்ணில் பட்ட திருச்சட்ட நூல் ஒவ்வொன்றையும் கிழித்து நெருப்பிலிட்டு எரித்தார்கள். எவரிடம் உடன்படிக்கை நூல் காணப்பட்டதோ, யார் திருச்சட்டத்தின்படி நடந்துவந்தார்களோ அவர்கள் அனைவரும் கொல்லப்படவேண்டும் என்பது மன்னனது கட்டளை. எனினும் இஸ்ரயேலருள் பலர் உறுதியாய் இருந்தனர் தூய்மையற்ற உணவுப்பொருள்களை உண்பதில்லை என்று தங்களுக்குள் முடிவு செய்து கொண்டனர். உணவுப்பொருள்களால் தங்களைத் தீட்டுப்படுத்திக் கொள்வதைவிட, தூய உடன்படிக்கையை மாசுபடுத்துவதைவிடச்சாவதே சிறந்தது என்று கருதினர் அவ்வாறே இறந்தனர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது ஒழுங்கு முறைகளை
நான் கடைப்பிடிப்பேன்

**நற்செய்தி : லூக்கா 18 : 35 - 43**

அக்காலத்தில் இயேசு எரிகோவை நெருங்கி வந்தபோது, பார்வையற்ற ஒருவர் வழியோரமாய் உட்கார்ந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்தார். மக்கள் கூட்டம் கடந்து போய்க்கொண் டிருந்ததைக் கவனித்த அவர், "இது என்ன?" என்று வினவினார். நாசரேத்து இயேசு போய்க் கொண்டிருக்கிறார் என்று அவருக்குத் தெரிவித்தார்கள். உடனே அவர், "இயேசுவே! தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்" என்று கூக்குரலிட்டார். முன்னே சென்று கொண்டிருந்தவர்கள் அமைதியாய் இருக்குமாறு அவரை அதட்டினார்கள். ஆனால் அவர், "தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்" என்று இன்னும் உரக்கக் கத்தினார். இயேசு நின்று, அவரைத் தம்மிடம் கூட்டிக் கொண்டு வரும்படி ஆணையிட்டார். அவர் நெருங்கி வந்ததும், "நான் உமக்கு என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்" என்று இயேசு கேட்டார். அதற்கு அவர், "ஆண்டவரே, நான் மீண்டும் பார்வை பெற வேண்டும்" என்றார். இயேசு அவரிடம், "பார்வை பெறும் உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று" என்றார். அவர் உடனே பார்வை பெற்று, கடவுளைப் போற்றிப் புகழ்ந்து கொண்டே இயேசுவைப் பின்பற்றினார். இதைக் கண்ட மக்கள் யாவரும் கடவுளைப் புகழ்ந்தனர்.

**தியானம்:** இன்றைய தியானமானது எமது வாழ்க்கைக்கு நம்பிக்கை என்பது முக்கியமானது என்பதை தெளிவுபடுத்தி, நாங்களும் நம்பிக்கையில் நிலைத்து வாழ்வோமேயானால், எமது வாழ்வானது நிலையானதும், நிறைவானதாகவும் இருக்கும் என்பதைத் தெரிவுபடுத்துகின்றது. ஆனால் கணவன் மனைவிக்கிடையே, அயலவர்களுக்கிடையே, உறவுகளுக்கிடையே நம்பிக்கை நிலையற்று காணப்படுவதால்தான் எமது வாழ்வானது சிதைந்து, சீரழிந்துபோய்க் காணப்படுகின்றது. இவ்வாறு நம்பிக்கையற்று வாழ்வோமேயானால் இறையருளையும், ஆசீர்வாதத்தையும், அவரது வல்லமையையும் பெற்றுக்கொள்ள தகுதியற்றவர்களாகிவிடுவோம். அன்று வீதியோரத்தில் பிச்சை எடுத்துக்கொண்டு இருந்தவர் அவர் பாவியாயிருந்தாலும் கூட அவ்வளியே இயேசு செல்வதை அறிந்து ஆண்டவர் இயேசு ஒருவரால்தால் குணப்படுத்த முடியும் என்று நம்பியதால்தான் "தாவீதின் மகனே என்மேல் இரங்கும்" என்று அழைக்கும் பொழுது அவரது நம்பிக்கையின் நிமித்தம் "உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்" (லூக்.18:41) என்று கேட்டு அவர் பார்வைபெறச்செய்தார். நாங்கள் நம்பிக்கையற்று வாழ்வதனால் எமது கண்கள் மறைக்கப்பட்டுள்ளது முதலில் நாங்கள் இயேசுவை இனங்கண்டுகொள்ள வேண்டும். அதற்கு எம்மத்தியில் நம்பிக்கையை வளர்தோமாகில் இறைவனில் நம்பிக்கை தானாகவே ஏற்படும், இலகுவில் இயேசுவை இனங்கண்டுகொள்ள முடியும். அப்பொழுது எமக்கு எவை தேவையோ நாம் அவர்மேல் கொண்டுள்ள நம்பிக்கையின் நிமித்தம் நாங்கள் கேட்பதற்கு முன்பதாகவே எமக்கு யாவற்றையும் தருவார். எனவே நாங்கள் எவ்வகையாக பாவியாக இருந்தாலும் மன்னிப்பு வேண்டி இறைவனில் நம்பிக்கை கொள்வோம், எம்மில் நம்பிக்கை கொள்வோம். சிதைந்து போன வாழ்வை சீர்படுத்தி ஒற்றுமையான புது வாழ்வாகமாற நம்பிக்கையடன் வரம்வேண்டுவோம்.